REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

இதுவும் அங்குதானே?

புதுடில்லி, மார்ச் 18—

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக 4000 மைல் நீளமுள்ள இரயில் பாதைகள் அமைக்கப் படலாமென்று தெரியவருகிறது. இதில் சுமார் 1000 மைல் நீள முள்ள பாதை, ஏற்கனவே போடப்பட்டுள்ள பாதைக்குப் பக்கத் திலேயே இரண்டாவது 'லைனா'கப் போடப்படும்.

இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இரயில்வே விஸ்தரிப்பு, அபிவிருத்தி வேலைகளுக்கு 800 கோடி ரூபாய் செல விடப்படும் என்று கூறப்படுகிறது. மேலும், புதிய பாலங்களும் இரயில் நிலையங்களும் நிர்மாணிக்கப்படுமென்றும், கூடுதலாக 50 சதவிகித போக்குவரத்து வசதி அதிகரிக்குமென்றும் தெரிகிறது.

மலர் 2] சென்னை: பங்குனி 6உ சனி (19—3—55) ★ ★ வெளியூர்: பங்குனி 7உ ஞாயிறு (20—3—55) [இதழ் 237

ஆந்திர தேர்தலில் பம்பாய் பணத்தின் சேவை

'பிறர் பணம்—பிரச்சார உதவியை ஒப்புகிறேன்'

'அமைச்சர் குழு ஏற்பாட்டில் 'அன்னியர்' நுழைய விடேன்'

'பணம்-பிரச்சாரம் இரண்டையும் இலஞ்சம் கொடுத்து அடிமையாக்க முயல்வதா?'

'அதற்கு இரையாகிவிட மந்த மதியினர் அல்ல ஆந்திரர்'

ஆந்திர கேசரியின் நிலைமை விளக்கம்

"பொதுத் தேர்தலின்போது, ஆந்திராவிற்கு 'வெளியி லிருந்து வந்தவர்கள்,' தேர்தல் இயக்கத்திற்காக செய்துள்ள உதவியை உணர்கிறேன்; பத்திரிகைகளில் சிலவும், பம்பாய் மற்றும் இதர இடங்களைச் சேர்ந்த பணக்காரர்கள் பணம் கொடுத்தும், தேர்தல் இயக்கத்திற்கு உதவி புரிந்திருக்கின் றனர்.

"ஆனல், அந்த 'வெளியார்'கள் இப்போது, 'தாங்கள்தான் ஆந்திர தேர்தலில் காங்கிரஸ் முன்னணி பெற்ற வெற்றிக்குக் காரணவான்கள்; எனவே, ஆந்திராவில் மந்திரிசபை அமைக் கும் வேலையையும் நாங்கள்தான் கவனிப்போம்,' என்று உரிமை கொண்டாடுவது எப்படி என்பதுதான் எனக்குப் புரிய வில்லை.

"இந்த 'வெளியார்'கள் முன்னைய மந்திரிசபையில் அங்கம் பெற்றிருந்த என்னையும், எனது சகாக்களையும் ஒதுக்கி வைத்து விட்டு, மந்திரிசபை அமைப்பதில் ஈடுபடும் போக்கினைக் கண்டு எனக்குக் கோபம் வருகிறது; இதற்காக நான் யாரிடமும் சென்று, 'என்னைக் கட்சித் தலைவராக்கி, முதன் மந்திரியாக்குங் கள்,' என்று கேட்கமாட்டேன்; அவர்களின் போக்கினை மட்டுமே எதிர்க்கிறேன்."

—என்று, டி. பிரகாசம் அவர்கள், கர்னூலில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"வெளியார்களின் பணத்தாலும், வார்த்தைகளாலும், ஆந்திர மக்களை ஊமையாக்கிவிட முடியாது,"

என்று அவர் குறிப்பிட்டபோது, கூடியிருந்த பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்களும் கைதட்டி ஆரவாரித்திருக்கின்றனர்.

தோழர் பிரகாசம் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதற்கு, முன்னைய மந்திரி சபையின் திறம்பட்ட சேவைதான் காரணம்; அந்த உண்மையை யாரும் அலட்சியப்படுத்திவிட முடியாது

"கடந்த பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டுகளிடம் காங்கிரஸ் படு தோல்வி கண்டது; அதற்குக் காரணம், தேர்தலுக்கு முன்பிருந்த காங்கிரஸ் மந்திரி - சபைகளின் தவறுகள்தான்.

"யாருடைய போக்கினால் கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி கண்டு, கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றார்களோ, அவர்களையே மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்துவது சரியாகுமா?" என்றார்.

போலீசாருக்குக் - குடியிருப்பு இடம்

இதுவரையிலும் 12,588 போலீஸ் கான்ஸ்டபிள்களுக்குக் குடியிருப்பு இடம் தரப்பட்டுள்ள தென்றும், இன்னும் 11,408 பேருக்கு இடவசதி தரப்பட வேண்டுமென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை சட்ட சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறியிருக்கிறார்.

இவ்வாண்டில் மேலும் 389 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதென்றும், 1957-ல் இவ்வேலைகள் முடிவடைந்து விடுமென்றும் தெரிவித்திருக் கிறார்.

சென்னை - மதுரை விமான போக்குவரத்து

சென்னைக்கும்—மதுரைக்கு மிடையே விமானப் போக்கு வரத்தை ஏற்படுத்துவது உத்தே சிக்கப்பட்டுள்ளது என்றும், பிரிட் டனிலிருந்து 'ஹெரான்' எனும் புதிய விமானம் ஒன்று கிடைப் பதைப் பொறுத்துத்தான் ஆரம் பிக்கப்படும் தேதி குறிப்பிடப்படும் என்றும் மத்திய செய்திப் போக்கு வரத்து உதவி அமைச்சர் ராஜ்பக தூர், மக்கள் சபையில் தெரிவித் துள்ளார்.

'விவசாயத்தை நம்பி வாழ்வோர் தொகை பெருகியுள்ளது'

'தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொகை முன்னிலும் குறைந்திருக்கிறது'

'இந்நிலையில் நாம் முன்னேறியுள்ளதாக நிதி மந்திரி கூறுகிறார்'

முதல் ஐந்தாண்டுத் திட்ட விளைவு குறித்து குருபாதசாமி

"ஐந்தாண்டுத் திட்டத்தினல் இதுவரை கிடைத்துள்ள பலன்கள், வேலையில்லாத் திண்டாட்டம், குறைவான வேலை வசதி கள், சிறிய தொழில்களின் சீரழிவு, மக்களின் குறைந்த வாங்கும் சக்தி இவைதான்."

"விவசாயப் பொருள் உற்பத்தி அதிகரித்திருப்பதற்கு, திட்டம் மட்டுமே காரணமல்ல; சாதகமான காலநிலை, மக்களின் மிகக் குறைந்த வாங்கும் சக்தி இவற்றினல்தான் பெரும் அளவு விவசா யப் பொருள் உற்பத்தி அதிகரித்திருக்கிறது."

"1929-30-ல் விவசாயத்தையே நம்பி வாழ்ந்துகொண்டிருந் தவர் தொகை 71·2 சதவிகிதமாக இருந்தது போன்றே இன்றும் 73·3 சதவிகிதமாகத்தான் இருந்துவருகிறது; 1930-ல், தொழிலை நம்பி வாழ்ந்தவர்கள் தொகை 16·3 சதவிகிதமாக இருக்க, இன்றே அத்தொகை 13 சதவிகிதமாகக் குறைந்துபோய் இருக்கிறது. இந்த நிலையில், நாம் முன்னேறியுள்ளோம் என நிதி அமைச்சர் பெருமைப் பட்டுக் கோள்வது வியப்புக்குரியதாக இருக்கிறது,"

—என்று மைசூர் ம. சோ. கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பி னரான எம். எஸ். குருபாதசாமி, வரவு-செலவுத் திட்ட விவாதத் தின்போது பேசியிருக்கிறார்.

அவர் மேலும், "வேலை இல் லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், முக்கியமான பொருள்களின் விலையை நிர்ணயிக்கவும் வேண் டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பதவி இழந்த பட்டத்தின் ஆர்ப்பாட்டம்

திரு - கொச்சி சட்டசபையில் எதிர்க்கட்சியினர் வெளியேற்றம்!

திருவனந்தபுரம், மார்ச் 18— திரு-கொச்சி சட்டசபையில் வரவு-செலவுத் திட்ட விவாதக் கூட்டம் துவங்கியது. கேள்வி நேரத்திற்குப் பின் எல்லா எதிர்க் கட்சியினரும், திரு-கொச்சியில் காங்கிரஸ் மந்திரிசபை அமைக்கப் பட்டதை எதிர்த்து, சபையை விட்டு வெளியேறினர்.

பட்டம்தாணுவின் யோசனைப்படி சட்டசபையைக் கலைக்காமல், காங் கிரஸ் கட்சியை மந்திரிசபை அமைக்கச் செய்த இராஜப்பிரமுக ரின் செய்கையைக் கண்டிப்பதாகக் கூறி, சட்டசபை முன், ம. சோ. கட்சித் தொண்டர்கள் ஆர்ப்பாட் டம் நடத்தினர்.

பட்டம் தாணுபிள்ளை, "நாங்கள் தொடர்ந்து சபையின் நடவடிக்கை களில் கலந்து கொள்ளாது வெளி யேறுவதற்குக் காரணம், காங்கி ரஸ் பதவிக்கு வந்த ஜனநாயக மற்ற போக்கினைக் கண்டிப்பதற் குத்தான்," என்று கூறி வெளி யேறியிருக்கிறார்.

தோழர் டி. வி. தாமஸ் என்ற கம்யூனிஸ்டுத் தலைவர், "சென்ற பொதுத் தேர்தலில், காங்கிரசை மக்கள் ஆதரிக்கவில்லை; அப்படி இருக்கும்போது காங்கிரஸ் மீண் டும் பதவிக்கு வருவதை நாங்கள் கண்டிக்கிறோம்" என்று கூறி விட்டு வெளியேறியிருக்கிறார்.

பட்டம் தாணு வெளியேறி யதும், 700 பேரடங்கிய ஊர்வலம் ஒன்றிருகுத் தலைமைதாங்கி, சட்ட சபைமுன் கூடி நின்று ஆர்ப்பாட் டம் நடத்தினர் என்றும், பதினைந்து நிமிட ஆர்ப்பாட்டத் திற்குப் பின், கூட்டம் அமைதி யாகவே கலைந்தது என்றும் கூறப் படுகிறது.

'மத்திய அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடந்துகொள்கிறது'

'ஆந்திராவில் தொழில்வளர்ச்சிக்கு உதவவில்லை'

"ஆந்திர மாநிலத்திடம் மத்திய அரசாங்கம் மாற்றாந்தாய் மனப் போக்குடன் நடந்துகொள் கிறது.

"ஆந்திர மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு, மத்திய அரசாங் கம் எப்பொழுதும் உதவிகர மாக இருக்கவில்லை,"

என்று, மத்திய அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டி, டில்லி மேல்சபை யில், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பின ராயுள்ள பிரசாத ராவ் ஆந்திர வரவு - செலவுத் திட்ட விவாதத் தின்போது பேசியிருக்கிறார்.

மனைவிகளை விற்கும் மடமை!

உத்திர பிரதேசத்தில் நிலவுகிறதாம்

உத்திர பிரதேச மாநிலத்தின் சில மலைப்பாங்கான மாவட்டங் களில், பெண்களையும், மனைவி களையும் விற்பனை செய்கிற பழக் கம் இன்னுமிருந்துவருவதாக நரேந்திர சிங் பிஸ்ட் என்ற சட்டசபை உறுப்பினர் கூறி யிருக்கிறார்.

இந்தத் தீயப் பழக்கத்தை நிறுத்த சர்க்கார் சட்டமியற்ற வேண்டும் என்று அவர் கோரி யிருக்கிறார்.

முதன் மந்திரி டாக்டர் சம்பூர்ணா நந்த், இதுபற்றி விசாரணை நடத்தி வருவதாயும் தொடர்ந்து இது கவனிக்கப்படும் என்றும் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

தீமைகளை ஆராய...!

புதுடில்லி, மார்ச் 17—

அணுகுண்டுகளை உபயோகிப்ப தால் ஏற்படும் தீமைகளை ஆராய் வதற்குப் பூர்வாங்க நடவடிக்கை யாக மூன்று அல்லது நான்கு இந்திய விஞ்ஞானிகள் கொண்ட குழு ஒன்றை இந்திய சர்க்கார் நிய மிக்கலாம் என்று கருதப்படுகிறது.

தென்னாட்டிற்கு இரும்புத் தொழிற்சாலை வேண்டும்!

புதுடில்லி, மார்ச் 18—

"தென்னிந்தியாவில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற் சாலை—குறைந்த பட்சம் ஒரு பரீட்சார்த்த உருக்கு ஆலை யாவது உடனடியாகத் துவக்க வேண்டும்,"

என்று மக்கள் சபையில், மைசூர் காங்கிரஸ் உறுப்பினரான டி. சுப் பிரமணியம், வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது வற்புறுத்தி யிருக்கிறார்.

"கைத்தறித் தொழில், ஆலைத் தொழிலைக் காட்டிலும் 20 மடங்கு அதிகமான பேர்களுக்கு வேலை தரக்கூடியதாகும்; எனவே கைத் தறி நெசவாளர்களுக்குக் கடன் வசதி தரவேண்டியதுடன், நியாய மான விலையில் நூலும், புதிய முறை தறிகளும் கிடைக்கச் செய்ய வேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

சென்னை 19—3—'55 சனி

யாரை ஏமாற்றுவதற்கு?

நாட்டில் நிலவிவரும் கல்வி முறை, காலத்தின் தேவைக்கு ஏற்றதாய் இருக்கவில்லை என்று பொதுவாக நிலவிவந்த கருத்தைப் பயன்படுத்திக் கொண்டு மூன்ருண்டுகளுக்கு முன், சென்னை மாகில ஆட்சிபீடத்திலமர்ந்திருந்த ஆச்சாரியார், 'அவரவர் அவாது குலத்தொழிலையே செய்யவேண்டும்,' என்று கூறி, தென்னகத்தில் அரும்பு விட்டு வரும் மறுமலர்ச்சியைக் கருகச் செய்து, நமது இடைவிடாத பகுத்தறிவுப் பணியினுல்—நாட்டு மக்களின் விழிப்புணர்வினுல் செல்வாக்கிழந்து, செல்லாக்காசாகி சாய்ந்துவந்த வருணச்சிரம முறைக்கு உயிரூட்ட, 'புதிய கல்வித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை 'புது இரத்தமா'கப் பயன்படுத்த எண்ணினுர்; புயலென எழுந்த எதிர்ப்பையும் மதியாது புகுத்தினுர் திட்டத்தை.

மனுவும் மாந்தாதாவும், யாக்ஞவல்கியனும், பாணினியும், பதஞ்சலியும், சாணக்கியனும் அவரது பரம்பரையினரும், வகுத்து,வளர்த்து, காத்துவந்த வருணுசிரம சமூக அமைப்பு, சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும், இயற்கையையும் தங்கட்கு சாதகமாக்கிக்கொள்ள வேண்டிய மக்களை, அந்தச் சந்தர்ப்பங்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் தங்களை நிரந்தர அடிமைகளாக்கிக்கொள்ளுகிற நிலையை உருவாக்கிவிட்டிருந்தன. அந்த அவலநிலையைமாற்றி, மக்கள்-குறிப்பாகத் திராவிடர்கள், தன்னம்பிக்கையும், தன்மானமும், பகுத்தறிவும், பண்பட்ட வாழ்வும்,நாட்டுப்பற்றும் பெறவேண்டும் என்பதற்காக, திராவிட இயக்கத்தவர் எத்தனையோ எண்ணற்ற இன்னல்களை, இடுக்கண்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். கொண்ட கொள்கையில் உறுதியும் பிடிப்புங்கொண்டு உயிரைத் திரணமாக மதித்து பகுத்தறிவுப் பாதையில் மக்களை இழுத்துவர முயற்சித்து வந்திருக்கிறுர்கள்.

அவர்களது முயற்சி முற்றுப் பெற்று திராவிடர் சமூகம் முன் போலவே தலை நிமிர்ந்து உலகத்தோடு ஒட்டிவாழ முற்படு முன்பே, அவர்களது முயற்சியை முறியடிக்க, சனுதன வெறியர்களும்,பழைமைப் பித்தர்களும், சாதிப்பிரியர்களும் அவ்வப்போது சீறி எழுந்தார்கள் என்றுலும், ஆச்சாரியார், தனது கையில் எதிர்பாராமல் சிக்கிவிட்ட அதிகாரத்தை முழுவதுமாகத் திரட்டி வைத்துக்கொண்டு திராவிடரிடை வளர்ந்து வரும் புத்துலக, பகுத்தறிவு எண்ணங்களை, —மறுமலர்ச்சிக் கருத்துக்களை, கருவறுக்க, தனது புதிய கல்வித் திட்டத்தைப் பயன்படுத்த முன் வந்தார்.

ஆகவேதான் தி. மு. கழகம் திட்டத்தின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தி, திட்டத்திற்கு மக்களிடை எழுந்த எதிர்ப்பை ஒன்றுதிரட்டி, அதற்குப் போராட்ட உருவும் கொடுத்து களத்திலிறங்கி, பலி பல தந்து போரிட்டு, திட்டத்தை அரசாங்கம் திரும்பிப்பெறுமாறு செய்தது.

இந்த கடந்தகால சம்பவங்களை இப்போது இங்கு நினைவூட்டுவதற்குக் காரணம், புதுக் கல்வித் திட்டத்தை திரும்பப் பெற்றபோது அமைச்சர் சுப்ரமணியம் அவர்கள் சட்டசபையில் பேசுகையில் "ஆதாரக் கல்வி முறைதான் எங்களது இறுதி இலட்சியம் என்பதை தெளிவாக இன்று கூற இச்சபையில் விரும்புகிறேன். அதில் எத்தகைய சந்தேகமும் இருக்க வேண்டாம்; ஆனுல் அதை நாடுமுழுதும் புகுத்துவது கஷ்டமான காரியமாயிருப்பதால் இடைக்காலத்திற்கான திட்டம் தயாரிக்க ஒரு விசாரணைக் குழு அமைப்போம்" என்று குறிப்பிட்டார்.

மேலும் அண்மையில் ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில், இன்னும் பத்து ஆண்டுகளுக்கு முன் இந்தியா முழுவதிலும் ஆதாரக் கல்வி முறைஅமுலுக்கு வரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாட்டில் கல்விமுறை எப்படி இருக்கவேண்டும், எந்தக் கல்விமுறை அமுல் செய்யப்படவேண்டும் என்பதை ஆவடி காங்கிரஸ் தெளிவாக்கியுள்ளது. அதுபோலவே அமைச்சர் சுப்பிரமணியம், ஆச்சாரியார் திட்டத்தைக் கைவிட்டு விட்டதாக சட்ட சபையில் பேசுகையில் ஆதாரக் கல்வியே தங்கள் இலட்சியம் என்றும் குறிப்பிட்டிருக்கிறுர்.

இந்த நிலையில், நாட்டில் ஏற்கனவேயுள்ள கல்வி நிலைபற்றி ஆராய்ந்து சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்கு என்று கூறி டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் தலைமையில் ஒரு ஆரம்பக் கல்விக் குழு நியமிக்கப்பட்டு, குழு விசாரணையில் ஈடுபட்டிருக்கிறது.

அமைச்சர் சுப்பிரமணியமும், ஆவடி தீர்மானமும், காங்கிரஸ் ஆட்சி ஆதாரத் திட்டத்தையே லட்சியமாகக் கொள்ளும் என்று கூறிவிட்ட பிறகு, ஆரம்பக் கல்வி பற்றி விசாரணை செய்வதற்கு என்று ஒரு குழு நியமிக்கப்பட்டிருப்பது, யாரை ஏமாற்றுவதற்கு?

கல்வி மந்திரியும், அவர் சார்ந்திருக்கிற காங்கிரஸ் ஆட்சி பீடமும் இப்படி மக்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, மக்களை ஏமாற்றிவிடலாம் என்று நினைப்பது தவறு என்பதை அவர்களுக்கு நினைவூட்டத்தான் ஏற்கனவே இருக்கும் திட்டம் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை என்று பொதுவாக நிலவிய கருத்தை போர்வையாகச் சுற்றிக்கொண்டு ஆச்சாரியார், தனது வருணச்ரம கல்வித் திட்டத்தைப் புகுத்தியபோது, மக்கள் ஏமாந்துவிடவில்லை. ஆச்சாரியார்தான் ஆட்சிபீடத்திலிருந்து அகற்றப்பட்டார் என்பதை எடுத்துக்காட்டினேம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

ஆந்திரத் திட்டங்கள்

கர்னூல், மார்ச் 16—

ஆந்திர மாநில சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்காக ரூ. 40 கோடி பெறுமான மின்சாரத் திட்டங்களை திட்டக் குழுவிற்கு அனுப்பி வைக்கும் என்று தெரிகிறது.

இன்னும் வேலை முடியாதிருக்கிற 'மச்கண்டு' மின்சாரத் திட்டத்தின் மற்ருெரு பகுதி வேலையைத் துவக்கவும், கிராம மின்சார விநியோகத் திட்டங்களும் ஏற்கனவே திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுவிட்டன.

மற்றும், துங்கபத்திரா திட்டத்தில் எஞ்சியுள்ள வேலைப்பகுதி, நெல்லூர் தெர்மல் திட்டம் முதலியவைகளும் இன்னும் ஒரு வாரத்தில் அனுப்பப்படும் என்று தெரியவருகிறது.

மச்கண்டு திட்டம்

இந்த நீர்ப்பாசன, மின்சாரத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 23 கோடியாகும்.

இந்தத் திட்டத்தை ஆந்திரா, ஒரிசா ஆகிய இரு மாநில அரசாங்கங்களும் கூட்டாகச் சேர்ந்து நிறைவேற்றி வருகின்றன என்பது குறிப்பிடத்தகுந்தது.

லஞ்ச ஊழல் மலிந்துவிட்டது

இமாசலப் பிரதேச நிர்வாகத்தின் மீது குற்றச்சாட்டு

இமாசலப் பிரதேச மாநில அரசாங்கத்தில் லஞ்ச ஊழலும், வீண் காலந் தாழ்த்தலும் மலிந்துவிட்டதாக காங்கிரஸ், கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் சட்டசபையில் கண்டனம் தெரிவித்தனர்.

சில இலாகாக்களில் பணம் வீண் விரயமாக்கப்பட்டிருப்பதாகவும் சில உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

உபமானியக் கோரிக்கை விவாதத்தின்போது உறுப்பினர்கள் தெரிவித்த கண்டனத்திற்குப் பதிலளிக்கும் வகையில் முதன்மந்திரி டாக்டர் பார்மர், இனி அத்தகைய ஊழல்கள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்வதாயும், பெரும்பாலான லஞ்ச வழக்குகள், பொது மக்களின் ஒத்துழைப்பு இல்லாததினுல் வெற்றி பெருமல் போய்விட்டதாகவும் குறிப்பிட்டிருக்கிறுர்.

கோசி அணைக்கட்டுத் திட்ட தொழிலாளர்கள்

கூலி உயர்வும், இலவச இரயில் பிரயாண வசதியும் பெறுவர்

போதுமான ஆட்கள் கிடைக்கவில்லையாம்!

பாட்ஞ, மார்ச் 16—

கோசி அணைக்கட்டு வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இடையிடையே வேலையைவிட்டுப் போய்விடுகிறுர்களாம்.

இப்போது அங்கு வேலை குறித்த காலத்தில் முடிப்பதற்குத் தேவையான அளவு தொழிலாளர்கள் இல்லையாம்

கடந்த 15-ந் தேதிக்குள் திட்டத்தின் ஒரு பகுதி ஆரம்ப வேலையை முடித்துவிடத் திட்டமிட்டிருந்ததாம் அரசாங்கம்.

எனவே, ஓடிப்போய்விட்ட தொழிலாளர்களை மீண்டும் வரச் செய்யவும், புதிய ஆட்கள் சேருவதற்கு ஊக்கமூட்டும் வகையிலும், கூலியை அதிகப்படுத்தித் தரவும், இரயில் போக்குவரத்துக்கு இலவச வசதி செய்து தரவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

"ஏழை துயர்துடைக்க வேண்டியது நாகரீக சர்க்காரின் கடமையாகும்"

"ஏற்றத்தாழ்வு மறைந்தாலன்றி ஜனநாயகம் உயிர் வாழாது"

டாக்டர் இராதாகிருஷ்ணன் உரை

"சுதந்திரம் பெற்ற பிறகு நமது பிரச்சினைகள் எல்லாம், பெரும்பாலும் பொருளாதார ரீதியில் இருக்கின்றனவே தவிர அரசியல் ரீதியில் அல்ல;

"இந்தியாவில் உள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை வளமானதாகவும் முழுமையானதாகவும் ஆக்கவேண்டும் என்பதற்காகத்தான் சுதந்திரம் பெறப்பட்டது;

"உணவின்றி பசியோடும், வசிக்க வீடின்றியும், கவனிப்பாரற்று துயருற்றிருக்கும் மக்கள் ஏராளமாக நம்முன் காட்சி தருவது நமக்கு விடப்பட்டுள்ள அறைகூவலாகும்; ஏழ்மை என்பது தவிர்க்க முடியாததல்ல; இதர நாடுகளின் அனுபவம், அது தவிர்க்கப்படக்கூடியதே என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது;

"விழிப்புற்ற நமது மக்கள் ஆத்திரத்தால் தூண்டப்பட்டிருக்கிறுர்கள்; அந்த ஆத்திரம் பிறந்ததற்குக் காரணம், அவர்களது பேராசையோ, பொருமையோ, பகையோ அல்ல; மாருக அவர்களது போதாமையும், கேட்பாரற்ற நிலையும்தானுகும்.

"ஏழைகள் மேலும் கீழ்நிலை அடையாதவாறு தடுத்து, அவர்களது துயரங்களைப் போக்கவேண்டியது நாகரிகமான ஒவ்வொரு அரசாங்கத்தினுடைய கடமையாகும்;

"மேலும், கவனிப்பற்றுக் குவிந்திருக்கும் செல்வத்திற்கும், ஆழமான ஏழ்மைக்குமிடையில் உள்ள ஏற்றத் தாழ்வை—வேறுபாடுகளை அகற்றியாகவேண்டும்;

"ஜனநாயகம் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வதற்கு இந்த ஏற்றத்தாழ்வுகள் அகன்ருகவேண்டும்,"

—என்று, டாக்டர் இராதாகிருஷ்ணன், பம்பாய் பர்மா-ஷெல் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறுர்.

நேபாளத்திற்கு இந்தியா உதவி!

ரூ. 8 கோடி தருமாம்

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக நேபாள அரசாங்கத்திற்கு இந்திய அரசாங்கம் ரூ. 8 கோடி உதவும் என்று தெரிய வருகிறது.

நேபாள மாணவர்கள் இந்தியாவில் கல்வி பயிலுவதற்காக இலவசச் சம்பளம் தரவும், மருத்துவ வசதி தரவும், நீர்ப்பாசன - மின்சார திட்டங்களுக்காகவும் அந்த உதவி செய்யப்படுவதாக வெளிநாட்டிலாகா செயலாளர் மக்கள் சபையில் அறிவித்திருக்கிறுர்.

'ஆச்சாரி' அகலுகிறது!

'டி. டி. கிருஷ்ணன்'

மத்திய அரசாங்க வர்த்தக, தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தனது பெயருக்குப் பின்னுல் உள்ள 'ஆச்சாரி' என்ற சாதிச் சொல்லை நீக்கிவிட்டு, இனி, 'டி. டி. கிருஷ்ணு' அல்லது 'டி. டி. கிருஷ்ணன்' என்று அழைக்கப்படவே விரும்புகிருராம்.

இதனுல் கையெழுத்திடுவது சுலபமாவதுடன், அழியும் அந்த சொல் சுட்டிக் காட்டும் சாதிப் பெயரும் அகலுகிறது என்று அவர் கருதுகிருராம்.

அதேபோன்று, காங்கிரஸ் பொதுக் காரியதரிசியான ஸ்ரீமன் நாராயண் அகர்வாலும் 'அகர்வால்' என்ற தனது சாதிப் பெயரை நீக்கிவிடப்போவதாகக் கூறியிருக்கிறுர்.

பஞ்சசீலக் கொள்கை

பாகிஸ்தான் எதிர்ப்பு

கராச்சி, மார்ச் 18—

"'பஞ்சசீலக் கொள்கை' கம்யூனிஸ்டுகளால் முன்மொழியப்பட்டது" என்று பாகிஸ்தான் கருதுகிறதாம்.

இக்கொள்கை ஐ. நா. சாசனத்திலேயே அடங்கியுள்ளபடியால், அது அனுவசியமானது என்றும் பாக். சர்க்கார் கருதுவதாகவும், ஆசிய — ஆப்பிரிக்க மாநாட்டில் இதுசம்மந்தமாக ஏதாவது பிரேரபணை வந்தால் பாகிஸ்தான் அதை எதிர்க்கும் என்றும் கூறப்படுகிறது.

நகர சபைகளின் ஆயுள்காலம்!

சென்னை, மார்ச் 18—

தற்போதுள்ள நகரசபைகளின் ஆயுள் காலம் இவ்வாண்டு நவம்பர் திங்கள் முதல் தேதியுடன் முடிவடைந்துவிடுமென்றும், அவற்றிற்கான புதிய தேர்தல்கள் ஆகஸ்டுத் திங்கள் தொட்டு அக்டோபர் திங்களுக்குள் நடைபெற்றுவிடும் என்றும் அமைச்சர் இராமசாமி சென்னை சட்டசபையில் அறிவித்தார்.

ஆந்திராவில் ஒரு உரத் தொழிற்சாலை

புதுடில்லி, மார்ச் 17—

ஆந்திர மாநிலத்தில் ஒரு செயற்கை உர உற்பத்திச்சாலை ஏற்படுத்த பாரி கம்பெனிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சர்க்கார் தொழில், வர்த்தகத் துணை அமைச்சர் கனுங்கோ, டெல்லி மேல்சபையில் தெரிவித்திருக்கிறுர்.

"மேற்படி 'பாஸ்பேட்' உர உற்பத்தியை மேற்கொள்ள ஆந்திர சர்க்கார் முடிவு செய்யாததால் தான், தனிப்பட்ட ஒரு கம்பெனிக்கு இந்த அனுமதி கொடுக்கப்பட்டது," என்று, கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் தொழிலமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறினுர்.

எவ்வளவு தாராளம்?

சென்னை, மார்ச் 17—

சென்னை மாநிலத்திற்கு மத்திய சர்க்கார், மேலும் 20 சமுதாய நலத் திட்ட 'பிளாக்கு'களை ஒதுக்கியுள்ளதெனவும், இவ்வேலைகள் ஏப்ரல் திங்கள் முதல் தேதி தொட்டு மேற்கொள்ளப்படுமெனவும் தெரியவருகிறது.

ஒரு மாவட்டத்துக்கு 3 வீதம் 36 தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படலாமென்றும், அடுத்த ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டம் முடிவடைவதற்குள் (அதாவது 1960-க்குள்) சென்னை மாநிலம் முழுமையும் சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவை கொண்டுவரப்பட்டுவிடுமென்றும், இது, இனிமேலுள்ள நிர்வாக முறை அமைப்பில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பெறும் என்றும் கூறப்படுகிறது.

கள்ள மது உற்பத்தி இலாபகரமான தொழிலாகிவிட்டதாம்

குற்றங்கள் குறையவில்லை—மதுவிலக்கு வெற்றி பெறவில்லை!

சென்னை சர்க்கார் தந்த விளக்கம்

"மதுவிலக்குச் சட்டத்தின் தற்போதைய விதிகள், குற்றம் செய்தவர்கள் மீண்டும் அதே குற்றத்தைச் செய்யாமல் தடுக்கும் வகையில் தேவையான அளவுக்குக் கடுமையானவையாக இருக்க வில்லை; மேலும், கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழில் தற்போது மிக இலாபகரமான ஒரு தொழிலாக மாறிவிட்டிருக்கிறது; இம் முக்கியமான காரணங்களால்தான் மதுவிலக்குக் குற்றங்கள் படிப் படியாக அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

"சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் மதுவிலக்குக் கொள்கையில் எந்தவித மாறுதலும் கிடையாது; மதுவிலக்கை இன்னும் கடுமையாக அமுல் நடத்துவதற்கு, அதனை போலீஸ் இலாகாவினரிடம் ஒப்படைக்கும் யோசனை பரிசீலனையில் இருந்துவருகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதை ஒழிக்க உதவும் பொருட்டு, ஒரு விரிவான திட்டம் தயாரிக்க சர்க்கார் குழு ஒன்றை நியமித்துள்ளது; குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தருபவர் களுக்கோ அல்லது, கிராமவாசிகள் அனைவருக்குமோ வெகுமதிகள் வழங்குவது பற்றி இக்குழு தனது சிபாரிசுகளைச் செய்யும்; மேலும் மதுவிலக்கு அமுலை கடுமையானதாக்க மதுவிலக்குச் சட்டத் திற்குப் பல்வேறு திருத்தங்களைச் செய்யவும் சர்க்கார் உத்தேசித் துள்ளது."

—இவ்வாறு, சென்னை மாநிலத்தில் மதுவிலக்கு நிலை பற்றி, சென்னை சர்க்கார் உள்நாட்டிலாகா காரியதரிசி திட்டக் குழுவிற்குச் சமர்ப் பித்துள்ள அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

மேலும் அவ்வறிக்கையில் கூறப் பட்டுள்ளதாவது:—

"கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழில், மதுவிலக்குச் சட்டத் தின் வெற்றிக்கு ஒரு 'எதிரி'யாக இருந்து வருகிறது. மறைவான பல இடங்களிலும், இத்தொழில் அதிகமாக மேற்கொள்ளப்படுவ துடன், கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழில் மிக இலாபகரமான தொன்றாகவும் இருந்து வருகிறது. செல்வாக்கு மிகுந்த சிலர், சொந்த மூலதனம் போட்டு, கையாட்களை அமர்த்தி, இதனை ஒரு 'தொழிலா' கவே நடத்தி வருகின்றனர்.

நகர்ப்புறங்களுக்குத்தான் இக் கள்ளச் சாராயம் அதிகமாகக் கடத்தப்படுவதுடன், அங்குள்ள தொழிலகங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள்தான் இதனை அதிகமாகக் குடிக்கிறார்கள்; இக் கள்ளக் கடத்தல்கள் பெரும்பா லும் சிறுவர்களாலேயே நடை பெறுகின்றன; ஒரு சில வேளைக ளில் கார்கள்கூட உபயோகப்படுத் தப்படுகின்றன. இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் யாரேனும் அகப்பட்டுக் கொள்ளும்போது, இவர்களுக்காக நீதிமன்றங்களில் வாதாட, சாராயம் காய்ச்சுவோரே வழக்கறிஞர்களை அமர்த்திவிடுகின் றனர்; அபராதம் விதிக்கப்பட் டால் அந்த அபராதத் தொகை யையும் அவர்களே செலுத்தி விடு கிறார்கள்.

சட்டத்தின் குறைபாடுகள்

மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் குற்றம் செய்வோரை ஜாமீனில் விடுவிக்க சட்டம் அனுமதிக்கிறது. இவ்வாறு செய்வது, குற்றம் செய் தவர் மீண்டும் மீண்டும் அதே குற்றம் செய்வதற்கு வசதியளிப்ப தாக இருக்கிறது. குற்றவாளிக ளுக்கு 3 ஆண்டு காலம் வரை சிறைத் தண்டனையும், 5,000-ரூபாய் வரை அபராதமும் விதிக் கலாமென்று சட்டத்தில் கூறப் பட்டிருந்தும், இதுவரை ஓராண் டுக்கு அதிகமாக சிறைத் தண்டனை எவருக்கும் விதிக்கப்பட்டது கிடை யாது; இதுவரையிலும் சாதாரண மாக 1 முதல் 3 மாதம் வரை சிறைத் தண்டனையும், ரூ 10-முதல் 50 வரை அபராதமும்தான் விதிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, நகரங்களிலெல்லாம், மது ரசம் கலந்துள்ள மருந்துகளும் 'சர்வ சாதாரண'மாக உபயோ கிக்கப்பட்டு வருகின்றன.

பதனீரிலிருந்து கள்!

முன்னாள் கள் இறக்குவோருக்கு வேலை தருவதற்காகப் பதனீர் இறக்க சென்னை சர்க்கார் அனுமதி வழங்குகிறது. கூட்டுறவு முறை யில் வெல்லம் காய்ச்சுவதற்காகவே பதனீர் இறக்குவதற்கு வழங்கப் படும் இந்த அனுமதி துஷ்பிர யோகம் செய்யப்படுகிறது. மேற் படி தொழிலாளர்கள், 'பதனீர்' என்று சொல்லிக்கொண்டு 'கள்' ளையே இறக்கிவிடுகிறார்கள்; அல் லது, பதனீரிலிருந்து கள் தயார் செய்து விடுகிறார்கள். அனுப வத்திலிருந்து, பதனீர் இறக்க அனுமதி தரப்பட்டுள்ள மரங் களின் எண்ணிக்கைக்கும், காய்ச் சப் பெறும் வெல்லத்திற்கும் எந்த வித சம்மந்தமும் இருப்பதில்லை என்பது தெரிந்துவிட்டது. ஆயி னும் இச்சலுகையை ஒரு, 'அவசிய மான தீமை' என்றுதான் சொல்ல வேண்டும்; இச்சலுகை வழங்கப் படாவிடின் முன்னாள் கள் இறக்கு வோரிடையே வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகிவிடும்.

ஒத்துழைப்பில்லை

மதுவிலக்கு ஆரம்பத்தில் பொது மக்களிடையே நிலவி வந்த உற் சாகம் இப்போது காணப்பட வில்லை; குற்றவாளிகளைப் பற்றிய விபரங்களைத் தருவதற்குக்கூட கிராம மக்கள் மறுத்துவிடுகிறார் கள்; அப்படியே, குற்றவாளி களைக் கைது செய்து, சாராயம் காய்ச்ச உபயோகப்படுத்தப்பட்ட சாமான்களை கைப்பற்றும்போது தயாரிக்கப்படும் மகஜர்களுக்குச் சாட்சிகள் கிடைப்பது மிக மிகக் கஷ்டமாக இருக்கிறது. அதையும் மீறி யாராவது ஒருவர் சாட்சியா கக் கையெழுத்துப் போட்டாலும் நீதிமன்றங்களில் அவர் விரோத மாகவே சாட்சி கூறிவிடுகிறார்!"

1953 முடிய சென்னை மாநிலத் தில் 2187 வெல்லம் காய்ச்சும் சங்கங்கள் இருக்கின்றன என்றும், இதில் மூலதனம் போடப்பட்டுள்ள 2 லட்சம் 14 ஆயிரம் ரூபாயில் ஒரு லட்சத்து எண்பத்திரண்டாயிரம் ரூபாய், முன்னாள் கள் இறக்கினோ ருடையது என்றும், அவர்களது 'பங்கு' மூலம் மொத்தம் 7 லட் சத்து 25 ஆயிரம் ரூபாய் இருந்து வருகிறது. ஒரு ஆண்டில் 30 லட் சம் ரூபாய்க்கு அதிக பெறுமான வெல்லம் உற்பத்தி செய்யப்பட்ட தென்றும், தற்போது அவர்களுக் கெல்லாம் வேலைதர, பலவித கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதென்றும் அந்த அறிக் கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் (1953—54), திருவள்ளூர் தாலுகாவில், தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் 50 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன அவற்றுள் இரண்டு வேலைகள் பொதுமக்க ளின் ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தால் கைவிடப்பட்டன.

சென்னை சட்டசபையில்....

தற்கொலைகள் ஏன்?

மலையாளத்தில், பொன்னானி தாலுகாவில், நாட்டிகா பகுதி களில் அதிகமான தற்கொலை நிகழ்ச்சிகளுக்கான காரணங்கள் பற்றி கேள்விகள் கேட்கப்பட் டன.

"இப்பகுதிகளில், சென்ற ஆண் டில் மட்டும் 24 தற்கொலைச் சம்ப வங்கள் நிகழ்ந்துள்ளன," என்று நிதி அமைச்சர் அறிவித்திருக் கிறார்.

'கம்யூனிஸ்டுகட்சியினரால்தான் அதிக தற்கொலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன' என்று ஒரு காங்கிரஸ் உறுப்பினரும், 'காங்கி ரஸ் கட்சியினால்தான் அவை நடை பெறுகின்றன' என்று கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் ஒருவரும் புகார் கூறினர்.

இதுபற்றிக் குறிப்பிடுகையில் நிதியமைச்சர், 'இது அவரவர் களின் சொந்த அபிப்பிராயங்கள் தான்,' என்றார்.

முன்னாள் அமைச்சர் குட்டி கிருஷ்ணன் நாயர், "கேள்வி கேட்ட இரு உறுப்பினர்களும் மலையாளப் பகுதியைச் சேர்ந்தவர்க ளல்ல என்பது தெரியுமா?" என்று கேட்டபோது, அமைச்சர், 'ஆம்' என்று பதிலிறுத்துவிட்டு, பலத்த சிரிப்பொலிக்கிடையே, 'இம்மாதிரியான சில சமயங்களில், வெளியிலுள்ளவர்கள் நல்ல நீதி பதிகளாக இருப்பார்கள்' என்று குறிப்பிட்டார்.

"இம்மாதிரி தற்கொலைகளுக் குக் காரணம் என்ன என்பது பற்றி என்னிடம் தகவல்களேதும் கிடையாது; பட்டினி காரண மாகத்தான் சாவு ஏற்படுகிறது என்ற தகவலும் இல்லை," என்றார் அமைச்சர்.

இந்தத் தற்கொலைகளுக்குக் கார ணம், மலையாளம் மாவட்டத்தில் உள்ள ஒருவித அரசியல் கொள்கை பரவலாக இருப்பதாகவோ, அல் லது வேறு எந்தக் காரணமாகவோ இருக்கலாமென்பதற்கான தகவல்க ளேதும் கிடையாதென்றும், அது தவிர, இப்பகுதி, பஞ்சப்பகுதி என்றோ, அல்லது கம்யூனிஸ்டுப் பகுதி என்றோ அறிவித்து விடுவ தால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிட முடியாதென்றும் குறிப்பிட்டு விட்டு, அப்பகுதிகளின் பொருளா தார முன்னேற்றத்திற்குத் தக்க நடவடிக்கைகளை சர்க்கார் மேற் கொண்டு வருகிறது என்றும் தெரிவித்தார்.

நாய்களைப் பராமரிக்க 7 பேர்!

குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு போலீஸ் நாய்கள் உபயோகப்படுத் தப்பட்டது நல்ல பலனைத்தந் துள்ளதென்றும், இம்முறை பரீட் சார்த்தமாகவே கையாளப்படுவ தால் உடனடியாக இதனை ரத்து செய்வதற்கில்லை என்றும் அமைச் சர் சுப்பிரமணியம், கேள்வி ஒன் றுக்குப் பதிலளிக்கையில் குறிப் பிட்டிருக்கிறார்.

இந்த போலீஸ் நாய்களைப் பரா மரிக்க, ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு ஹெட்கான்ஸ்டபிள், 3 கான்ஸ் டபிள்கள், 2 பையன்கள் ஆக 7 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறினர்.

தவறு—தவிர்க்கப்படும்?

"மாவட்டக் கழகத் தேர்தல் களில் கையாளப்பட்ட வாக்குப் பதிவு முறையில், ஓரளவு அதிகப் படியாகாதவையாக இருந்ததினால், இனிமேல் நடைபெறும் தேர்தல் களில் இதனைத் தவிர்க்க வேறு ஏதாவது தகுந்த முறைகள் நிர்ண யிக்க முடியுமா என்பதை சர்க்கார் பரிசீலனை செய்யும்," என்று அமைச்சர் சுப்பிரமணியம் கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறியிருக் கிறார்.

கடந்த மாவட்டக் கழகத் தேர் தல்களின்போது, பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 65,15,743 என்றும், அவற்றுள் 5,54,235 வாக்குகள் செல்லுபடி யாகாமல் போய்விட்டன என்றும் ஸ்தல ஸ்தாபன மந்திரி தெரிவித் துள்ளார்.

வழக்குத் தொடர்ந்திருக்கிறது

சென்ற மாதம் 24-ந் தேதி யன்று இரவு சென்னை, திருவல் லிக்கேணியில் நடைபெற்ற ஓட்டல் தொழிலாளர் ஊர்வலம் ஒன்றின் மீது கல்லெறிந்து ஒரு தொழிலா ளரைத் தாக்கினது சம்மந்தமாக ஒரு ஓட்டல் சொந்தக்காரர் மீதும், மற்றும் இருவர் மீதும், இ. பி. கோ. 324-ம் பிரிவின் கீழ் வழக் குத் தொடரப்பட்டிருக்கிறது என்ற தகவலை அமைச்சர் பக்தவத் சலம் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஊர்வலத்தின்போது சோடா புட்டி வீசப்பட்டதால் 7 தொழிலாளர்கள் சிறு காயமுற் றனரெனவும், முன்கூட்டியே தெரிவிக்கப்படாமல் அவ்வூர்வலம் நடைபெற்றதால்தான் தகுந்த போலீஸ் பாதுகாப்புத்தர முடியா மல் போய்விட்டது என்றும் அவர் கூறினர்.

அது—சத்துள்ளதாமே!

சென்னை மாநிலத்தில், உணவு வகையைச் சேர்ந்த எண்ணெய் உற்பத்திக்கு 'கரும்புத் திப்பி' (மேலோ செஸ்)உபயோகப்படுத்தப் படுவது உண்மைதான் என்றும், இது சத்துள்ள பொருள் என்று சர்க்காருக்குத் தகவல் தரப்பட் டுள்ளதெனவும், கேள்வி ஒன்றுக் குப் பதிலளிக்கையில் அமைச்சர் பக்தவத்சலம் கூறினர்.

"நெல்லிக்குப்பம், புகலூர் ஆகிய இடங்களில் உள்ள ஆலைகளில் கழிக்கப்படும் கழிவுப் பொருட் களான இவை சுகாதாரத்தைப் பாதிப்பதாக இருப்பதால், சர்க்கார், இதுபற்றி நிபுணர்களைக் கலந்தாலோசிக்குமா?" என்ற கேள்விக்கு, அமைச்சர், சர்க்காருக் குக் கிடைத்துள்ள நிபுணர்களின் கருத்து அப்படிப்பட்டதல்ல என் றும், உறுப்பினரின் 'நிபுணர்' கருத்தை சுகாதார அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு போக இருப்பதாகவும் அமைச்சர் கூறி விட்டு, இந்தக் கரும்புச் சக்கை கால்நடைகட்கும் நல்ல உணவாக அமைந்துள்ளதென்றும் குறிப்பிட் டார்.

"இந்தக் கரும்புச் சக்கை கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு உபயோகப்படுத்தப்படுவதைக் கவ னித்து, சர்க்கார், அதன் விற்பனை யைக் கட்டுப்படுத்துவதைக் கவ னிக்குமா?" என்று கேட்கப்பட்ட போது, அமைச்சர், 'கவனிக்கும்' என்று பதில் தந்தார்.

இலவசமாக......!

"சென்னை மிருகக் கண்காட்சிச் சாலையை கண்டிராக்டர்களிடம் விடுவதை நிறுத்தி, இலவசமாக மக்கள் உள்ளே போக அனுமதிப் பதை சர்க்கார் கவனிக்கும்," என்று அமைச்சர் இராமசாமி படை யாச்சி, கேள்வி ஒன்றுக்குப் பதி லளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

'முடிவு'க்கு வருவராம்!

நெற்பயிருக்கு, 'ஸ்டெம்-போர்' என்று, வேரையே சேதமாக்கும் ஒருவகைப் பூச்சிகளால் ஏற்படும் தொல்லைகளை ஒழிக்கச் சாத்திய மான நடவடிக்கைகள் சர்க்காரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

இப்பிரச்சினை ஒரு அகில உலகப் பிரச்சினை என்று குறிப்பிட்டு விட்டு, அவர், சில மருந்துகளைப் போட்டால் அந்த நிலத்தில் காய் கறிகள் உற்பத்தி செய்யப்பட்டு அதனை சமைத்து உண்ட மக்கள் பலர் இறந்து போகவும் நேரிடும் அபாயம் இருப்பதாகவும், எனவே, இவையெல்லாவற்றையும் கவனித் துத்தான் ஒரு முடிவுகட்ட முடியு மென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"பெண் பூச்சிகளால் தொல்லை கள் அதிகமாக இருப்பதைக் கவ னித்து ஆண் பூச்சிகளைக் கொண்டு அவற்றை அடக்கி ஒடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?" என்ற கேள்விக்கு அமைச்சர், "அந்த யோசனை பற்றி உறுப்பினர், விவ ரம் கூறி உதவினால் கவனிக் கிறேன்" என்றார்.

திருமணங்கள்

சென்னை மவுண்ட் ரோடு, பைராகும்-பகதூர் தெரு, எண். 13 இல்லத்தில், 11—3—55 காலை 7 மணியளவில், தோழர் பா. தேர பதி—தோழியர் திரிபுரசுந்தரி திரு மணம் நடைபெற்றது. அன்று மாலை, தோழர் மு. புரட்சிமணி தலைமையில் நடைபெற்ற பாராட் டுக் கூட்டத்தில், தோழர்கள் அரு ணன், தாமோதரன், சப. முத்து ராமன், எஸ். எஸ் தென்னரசு, முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர் இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச் சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப் பட்டது – கிடைக்கப்பெற்றோம்— நன்றி—பொறுப்பாளர்.

• • •

17—2—55 காலை 11 மணிக்கு வடசென்னை தோழர் டி. வெங்க டேசன் தலைமையில், ஆலந்தூர் தோழர் டி. எம். மாதமுத்து— தோழியர் சொர்ணம் திருமணம் நடைபெற்றது. அன்று மாலை 6 மணிக்கு தோழர் முத்தையா தலை மையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், ஆர். எஸ். பாண்டியன், பெருமாள் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசி னர். இத்திருமணத்தின் நினை வாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றி — பொறுப்பா ளர்.

• • •

சென்னை சைதை விவசாய அலு வலக தோழர் தேவராஜன்—தோழி யர் சுகந்தி அம்மாள் பதிவுத் திரு மணம் 27—1—55ல் நடைபெற் றது அதையொட்டி 20—2—55 மாலை 3½ மணிக்கு சைதை உடுப்பி உணவு விடுதியில் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரனார் தலைமையில் தேநீர் விருந்து நடைபெற்றது. தலைவரும், தோழர் சைதை சம்பந்தனும் மணமக்களை வாழ்த்திப் பேசினர். பல தோழர் களால் வாழ்த்துக்களும், பரிசு களும் வழங்கப்பட்டது. இத்திரு மணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன் பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் —நன்றி—பொறுப்பாளர்

• • •

11—3—55 காலை 9 மணியள வில் தோழர் கே. எம். கண்ண பிரான் தலைமையில், சென்னை புளியந்தோப்பில் தோழர் இராமகிருட்டிணன் — தோழியர் லோகாம்பாள் திருமணம் நடை பெற்றபோது தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

• • •

பல்லாவரம் தி. மு. கழகத் தோழர் க. செல்வராசன்—தோழி யர் பூ. உமையாதேவி திருமணம் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரனார் தலைமையில் நடைபெற்றது. மண மக்களை வாழ்த்தி தோழர்கள் கண்ணதாசன், வில்லியம்ராஜ் ஆகி யோர் பேசினர்.

• • •

18—3—55 மாலை சென்னை, சேத்துப்பட்டு மங்களபுரத்தில், தோழர் ப. ஜீவானந்தம் எம். எல். ஏ., தலைமையில், 20 திருத்திய திருமணங்கள் ஒரே மேடையில் நடைபெற்றன. தோழியர் கிருஷ்ணபாய், தோழர்கள் கரும் பண்ணன், வி. பி. முருகையன் வாழ்த்துரை வழங்கினர்.

பிறப்பு

சென்னை தோழர் உ. துரைசாமி அவர்களது துணைவி யார், மாசித் திங்கள் 21-ம் நாளில் ஓர் பெண் மகவுக்குத் தாயானார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப் பட்டது—வரப்பெற்றோம்—நன்றி —பொறுப்பாளர்.

பகுத்தறிவு நாடகங்கள்

இராசிபுரத்திற்கருகிலுள்ள பட்டணத்தில், கபீர் நாடக மன்றத்தாரால், 9—3—55-ல் 'மல் லிகா'; 10—3—55ல் 'தமிழன் வாழ்வு'—என்ற பகுத்தறிவு நாட கங்கள் நடத்தப்பட்டன.

மதுவிலக்கு - வழக்குகள்

ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றனவாம்!

சென்னை மாநிலத்தில் மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டிருப்பதையும், அதை ஒட்டிய பிரச்சினைகளையும் குறித்து திட்டக் குழுவிற்கு சென்னை அரசாங்கம் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் மதுவிலக்குச் சட்டத்தை மீறியதாக அவ்வப்பொழுது தொடரப்பட்ட வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்களைத் தந்துள்ளனர்:—

ஆந்திரம் பிரியுமுன்:

1949-50:	67,650	வழக்குகள்
1950-51:	84,597	„
1951-52:	1,09,558	„
1952-53:	1,35,879	„
1953-54: (ஜூலை 1953 வரை)	47,698	„

ஆந்திரம் பிரிந்த பின்:

1953-54: (ஆகஸ்டு 1953 முதல் 1954 மார்ச் வரை)	52,560	„

இந்த எண்ணிக்கையில் 40 சதவிகிதத்திற்கும் அதிகமான வழக்குகள் திருட்டுத்தனமாக சாராயம் காய்ச்சியதாகவும், அதை ஒட்டிய குற்றம்புரிந்தது பற்றியுமாகவே இருந்தன என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

வழக்குகள் ஆண்டு தோறும் அதிகமாகிக் கொண்டு வருவது மக்களிடை மதுவிலக்கு பற்றிய உற்சாகம் குறைந்துவிட்டது என்பதைக் காட்டுகிறதாகவும் கூறப்படுகிறது.

தங்கம், வெள்ளிச் சாமான்களுக்கு உபரி வரி

சென்னை மேல்சபையில் தகவல்

தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்ட பொருட்களுக்கு ரூபாய்க்கு அரைஅணு வீதம் உபரி விற்பனை வரி விதிக்க துவக்கத்தில் சர்க்கார் தீர்மானித்த தென்றும், சட்டசபை விவாதத்தின்போது இதை மசோதாவிலிருந்து நீக்கி விடுவது என்று பின்னர் முடிவு கட்டியதாகவும், சென்னை சட்ட (மேல்) சபையில், உறுப்பினர் ஒருவரது கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

“கடைகளில் தயாரிக்கப்பட்ட நகைகளுக்கு விற்பனை வரியை 9 தம்பிடியிலிருந்து 15 தம்பிடியாக உயர்த்துவது பற்றி சர்க்கார் இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை” என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெற்றிலை விற்பனை வரியின் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 1,45,000 கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

மறைந்த மன்னருக்கு மக்களின் அனுதாபம்

நேபாளத்தில் அனுசரிக்கும் முறை

நேபாள மன்னர் திரிபுவனர் இறந்ததை யொட்டி, அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நேபாள மக்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள்பற்றி நேபாள வானொலி மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அவ்வறிவிப்பில் தெரிவித்துள்ளபடி, நேபாள மக்களனைவரும் மொட்டையடித்துக் கொள்ள வேண்டுமாம். தோலால் செய்யப்பட்ட பாதரட்சைகளையோ, கண்ணைக் கவரும் பல வர்ண ஆடைகளையோ அணியக்கூடாதாம். இந்த விதமாக அங்குள்ள பார்ப்பனர்கள் 3 நாட்களும், பார்ப்பனரல்லாத பிறர் 13 நாட்களும் நடந்து, தங்கள் துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமாம்! மேலும் மார்ச்சுத் திங்கள் 26-ந் தேதி வரையிலும் எந்தவிதமான கேளிக்கை நிகழ்ச்சிகளும் நடைபெறக் கூடாதென உத்திரவிடப் பட்டுள்ளதாம்.

ஐந்தாண்டு திட்ட கண்டனக்கூட்டங்கள்

★

பொத்தனூர்

திரு. வி. க. திடலில்

20—3—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: இரா. சகநாதன்

பேசுவோர்:

ப. உ. சண்முகம்
இரா. சண்முகம்
டி. பி. மூர்த்தி
டி. ஆர். முத்து
நாவரசன்

★

குரும்பேரி

மஜித் பந்தலில்

21—3—55 இரவு 7 மணிக்கு

தலைவர்: கு. மு. செங்கல்வராயன்

பேசுபவர்:

என். வி. நடராசன்

★

குழித்தலை

21—3—55 திங்கள் மாலை

தலைவர்: கை. அங்கமுத்து

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
தி. வீ. முத்துகிருஷ்ணன்

★

சமயநல்லூர்

திருவள்ளுவர் திடலில்

22—3—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: பொ. தங்கச்சாமி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்
எஸ். முத்து

★

சீர்காழி

பழைய எஸ். ஆர். சி. டாக்கீஸ் திடலில்

23—3—55 மாலை 5½ மணிக்கு

பேசுபவர்:

என். வி. நடராசன்

★

கம்பம்

வ. உ. சி. மைதானத்தில்

23—3—55 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்
கே. ஏ. கலையழகன்

★

காஞ்சியில்...

27—3—55 அன்று, காஞ்சீபுரத்தில் நடைபெறும் மறுமலர்ச்சிக் கழக ஆண்டு விழா நிகழ்ச்சியுடன் ‘ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்’ கொண்டாடுவதற்கு தலைமைக் கழக அனுமதி பெறப்பட்டிருக்கிறது. அன்று மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கலந்துகொள்வார்.

★

சென்னை

20—3—55 மாலை 6 மணிக்கு, சென்னை 4-வது வட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில் மணிகண்ட முதலி 6-வது தெருவில், தோழர் ச. ஆறுமுகம் தலைமையில் ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டம் நடைபெறும் மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

★

கண்டன ஊர்வலம்

20-3-55 காலை 8½ மணிக்கு, சென்னை 8-வது வட்ட தி.மு. கழகச் சார்பில், பெத்துநாய்க்கன்பேட்டை, லாயர் சின்னத்தம்பி முதலி தெருவிலிருந்து ஐந்தாண்டுத் திட்ட கண்டன ஊர்வலம் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமையில் புறப்பட்டு முக்கிய வீதிகளில் வலம் வரும்.

மதுரை நகர் தி.மு.கழக ஊழியர்கள் கூட்டம்

20-3-55 காலை 10 மணிக்கு, மதுரை நகர் சுந்தரம் தியேட்டரில், மதுரை நகர் தி. மு. கழக ஊழியர்கள் கூட்டம் நடைபெறும். ஊழியர்கள் கடமை’ என்பது பற்றி தோழர் ஈ. வெ. கி. சம்பத் பேசுவார்.

கழகக் கூட்டம்

★

சுந்தரபாண்டியம்

அண்ணா திடலில்

21—3—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எஸ். முத்து

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்
ஆ. திராவிடமணி

சென்னை 4-வது வட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்கட்கு

20—3—55 காலை 10 மணிக்கு, சென்னை, எண் 112, சோலையப்பன் தெரு, கல்வாய் இல்லத்தில், சென்னை 4-வது வட்ட தி.மு.கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

சென்னை 5-வது வட்ட தி.மு. கழக பொதுஉறுப்பினர்கட்கு

21—3—55 மாலை 6 மணிக்கு; சென்னை 5-வது வட்ட தி. மு. க பொது உறுப்பினர் கூட்டம் கழக இல்லத்தில் நடைபெறும். அதுபோது, கிளைக் கழகத் தேர்தல் பற்றி ஆவன செய்யப்படும்.

சென்னை 18-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

20—3—55 காலை 9 மணிக்கு சென்னை 18-வது வட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, கழக வரவு-செலவு பரிசீலனை, கிளைக் கழகத் தேர்தல், மற்றும் ஆக்க வேலைகள் குறித்து விவாதித்து முடிவெடுத்தபின், நன்றி தெரிவித்தலுடன், தற்போதைய செயற் குழு கலைக்கப்படும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

19—3—55 மாலை 6 மணிக்கு சென்னை, இராயபுரம், எண் 53 ம சா. கோயில் தெருவிலுள்ள வ. சென்னை குறள் நெறிக் கழக அறையில் தோழர் நல்லதம்பி தலைமையில் நடைபெறும். தோழர்கள் மு போ. வீரன், இரா. பாலு, தி. ந. மதிவாணன் ஆகியோர் பல தலைப்புகளில் பேசுவர்.

கலைக்கூடம்

20—3—55 காலை 10 மணிக்கு, சென்னை, வண்ணை, எண் 14-ஏ, ஆண்டியப்பன் தெருவில், தோழர் ஆ. சொக்கலிங்கம் தலைமையில் ‘வள்ளுவரும்—குறளும்’ என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

22—3—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும். திருக்குறளில், ‘வாய்மை’, ‘வெகுளாமை’ என்னும் அதிகாரங்களை திரு. மயிலை சிவமுத்து, திருமதி சிவக்கொழுந்து ஆகியோர் விளக்கிப் பேசுவர்.

அணுகுண்டுகளை உபயோகிப்பராம்!

எந்த ஒரு இடத்தில் ஆக்கிரமிப்பு நடைபெற்றாலும் அமெரிக்கா, சிறிய அணுகுண்டுகளைப் பிரயோகிக்கும் என்றும், இந்த வகையான சிறிய அணுகுண்டுகள் பசிபிக் பிராந்தியத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அமெரிக்கத் துணைத் தலைவர் நிக்சன் கூறியிருக்கிறார்.

சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழு கூட்டம்

செயலாளருக்கு பாராட்டும் — நன்றி அறிவித்தலும்

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 17—3—55 மாலை 7 மணிக்கு இராயபுரம் ‘அறிவகத்’தில், செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. 50 உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

கூட்டத் துவக்கத்தில் செயலாளர் பேசுகையில், அடுத்து, கிளைக் கழகத் தேர்தல்களும், மாவட்டக் குழுத் தேர்தலும் நடைபெற விருப்பதால் அநேகமாக இதுவே இறுதிக் கூட்டமாயிருக்கலாமென்றும், எனவே நம் மாவட்டக் குழுவின் எல்லா பிரச்சினைகளையும் விவாதித்து முடிவு செய்ய வேண்டுமென்றும், அதற்கேற்ப உறுப்பினர்கள் குழுவின் நிகழ்ச்சியினை சிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, சென்ற கூட்ட நிகழ்ச்சியினை வாசித்துக் கையெழுத்திட்டார்.

சென்னை மாவட்டத்தின் சார்பில் மார்ச்சு 4, 13 ஆகிய இரு தேதிகளில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட வரவு-செலவு படித்துக் காண்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், இறுதியாக சென்னை மாவட்டக் குழுவின் கடந்த இரண்டாண்டின் மொத்த வரவு-செலவு கணக்கில் (17-3-55 வரை) கையிருப்பு ரூ. 40—0—0 என்றும் குறிப்பிடப்பட்டது.

அடுத்து, பொதுச்செயலாளரின் அறிக்கைப்படி, 27—3—55-ம் நாளன்று சென்னை மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்களின் தேர்தலை நடத்திவைக்க தேர்தல் அதிகாரிகளாகப் பணியாற்றவிருக்கும் தோழர்களின் பெயர்களையும், தேர்தலை நடத்தி வைக்கவேண்டிய முறைகளைப் பற்றியும், அதற்கான முழுவிவரங்களையும் செயலாளர் எடுத்துரைத்தார்.

செயலாளருக்குப் பாராட்டு

கடந்த 2½ ஆண்டுகளாக சென்னை மாவட்டத்தின் செயலாளராகப் பணியாற்றி வரும் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களைப் பாராட்டி முன்னாள் செயலாளர் தோழர் வே. கோவிந்தசாமி பேசுகையில், இத்தனை ஆண்டுகளைவிட இந்த இரண்டு ஆண்டுகளில் சிறப்பிக்கத்தக்கவகையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பதாகவும், இதைக் கண்டு உண்மையிலேயே பாராட்டுவதாகவும்; தோழர் கண்ணபிரான் செயலாளராக இருந்து பணியாற்ற வேண்டுமென்று நீண்டநாள் தமக்கு ஆசையிருந்ததாகவும், அந்த ஆசையை வெற்றிகரமாக நிறைவேற்றிய தோழர் கண்ணபிரான் அவர்களையும், அவருக்குத் துணையாய் நின்ற முன்னாள் துணைச்செயலாளர் சிதம்பரம், இப்போதைய துணைச்செயலாளர் இராமசாமி, பொருளாளர் கண்ணப்பன் ஆகியோருக்கும் தமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து, தோழர்கள் இளம்பரிதி, ஆர். டி. அரசு, என். வி. நடராசன் ஆகியவர்கள் செயலாளர் அவர்களின் செயல் திறம், பண்பாடு ஆகிய சிறப்புகளைப் பாராட்டிப் பேசினர்.

செயலாளர் நன்றி

இறுதியாக தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் பாராட்டுதலுக்குப் பதில் தெரிவிக்கையில், தமக்கு யாரிடமும் தனி பட்ட பகைமை உணர்ச்சி கிடையாதென்றும், அதுபோலவே தமக்குற்ற துணையாக அனைவரும் இருந்து வந்ததை என்றுமே மறக்க முடியாதென்றும், சென்னை மாவட்டம் கடந்த ஆண்டுகளில் சிறப்பான பணியைச் செய்திருக்கிறதென்றால், அதற்குக் காரணம், இக்குழு உறுப்பினர் அனைவரும் தந்த ஒத்துழைப்பும், கிளைக் கழகங்கள் தந்த ஆதரவுமேயென்றும், அடுத்துவரும் செயலாளர் மேலும் சிறப்புற பணியாற்ற அனைவரும் ஆதரவுதர வேண்டுமென்று ஆசைப்படுவதாகவும், தாம் ஒரு உறுப்பினராகயிருந்து பணியாற்ற முடிவு செய்திருப்பதாகவும் கூறி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இடையே புகைப்படமும் எடுக்கப்பட்டது.

சென்னையில் கைத்தறி வாரம்

அண்ணாதுரை கலந்துகொள்வார்

நாடு முழுவதுமாக மார்ச் திங்கள் **20** முதல் **26**-ந் தேதி வரை கொண்டாடப்படும் விழாவினையொட்டி சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில், **22—3—55** மாலை 6 மணி அளவில், திரு. பி. டி. இராசன் தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசுவார்கள்.

நிகழ்ச்சிகள், எழும்பூர், எண் **34**, பாந்தியன் சாலையிலுள்ள சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

* * *

காஞ்சியில் கைத்தறி விழா

அண்ணாதுரை பங்குகொள்கிறார்

காஞ்சியில் நடைபெறும் கைத்தறி வார விழாவிலும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பங்குகொள்வார்கள் என்று தெரியவருகிறது.

பட்டு நெசவுக்கும் சலுகைகள்

பம்பாய், மார்ச் 19—

கூட்டுறவு முறையில் தற்போது பருத்தி நூலில் நெய்யும் கைத்தறி நெசவாளருக்குத் தரப்படும் வசதிகளை பட்டுத் தறி நெசவாளருக்கும் தருவது என்று மத்திய சர்க்கார் தீர்மானித்துள்ளதென, மத்திய தொழிலமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெரிவித்திருக்கிறார்.

இது தவிர, சொந்தத்தில் கைத்தறி வைத்து தொழில்புரிய இயலாத நெசவாளருக்கு தொழில் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவித் தருவதற்கான திட்டமொன்றும் தயாரிக்கப்படுவதாகவும் அறிவித்திருக்கிறார்.

‘குடும்பக்கட்டுப்பாடு’ குலைகிறது!

புதுடில்லி, மார்ச் 17—

இருபது மாத காலம் வரையிலும் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைப் பரீட்சார்த்தமாக அமுல் நடத்திய பிறகு, டெல்லியிலுள்ள இரண்டு குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களில் மேற்படி முறைகள் கைவிடப்பட்டுவிட்டன, என்ற தகவலை மத்திய சர்க்கார் சுகாதார அமைச்சர் வெளியிட்டிருக்கிறார்.

“மேற்படி முறைகளுக்கு, கணவன்மார்களிடமிருந்து அதிக ஆதரவு கிடைக்கவில்லை என்பது, அதனை அமுல் நடத்திய பிறகு தெரியவந்தது,” என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.